# கம்பம் நகராட்சி

2021–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் (31.12.2021) ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு, கம்பம் நகர்மன்ற கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

## கூட்டப்பொருட்கள்

| | |
|---|---|
| **1.** | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 12/2021ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக் குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | நகராட்சி பொறியாளர் அவர்களின் 12/2021ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக் குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம். |
| **3.** | இந்நகராட்சி லோயர் கேம்ப் குடிநீர் திட்டம் ரூ18.80 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செயல்படுத்தி பணிகள் முடித்து நகராட்சி வசம் 17.04.2020ம் தேதி முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தை நகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால்,வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட ரூ44.00 இலட்சம் மதிப்பீட்டில் உரிய மன்ற அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறிப்பிட்டுள்ள எல்.ராஜேந்திரன் என்பவருக்கு இவ்வலுவலக ந.க. எண் 1136/2020/இ2 நாள் 01.12.2020ம் தேதியிட்ட செயல் முறை ஆணையில் 01.12.2020 முதல் 30.11.2021 முடிய லோயர் கேம்ப் குடிநீர் திட்டத்தை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட அனுமதித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க எண் 29156/2019/DO2/நாள் **22.10.2020**ம் தேதிய கடிதத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்திட ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் செயல்பாடுகளில் குறைபாடுகள் ஏதுமில்லாதநிலையில் தொடர்ந்து நீட்டித்து கொள்ளலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கேட்கப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும்வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாதவகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின் படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு. எல். இராஜேந்திரன் அவர்களே தொடர்ந்து **1** மாதகாலத்திற்கு **01.01.2022** முதல் **31.01.2022** வரை பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. **4.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு :- 1)** மன்றம் அனுமதிக்கலாம்,<br>2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி **2021–2022–**ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.1136/2020/இ2)** |
| **4.** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கொசுப்புழு உற்பத்தியாவதை தடுக்கும் பணிக்கு 63 பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண். **3963/2018/**எச்1 நாள்.**27.02.2020** –இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு **29.02.2020** முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த **28.02.2021** உடன் ஒப்பந்தம் முடிவடைந்ததால் அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதால் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் |

| | |
|---|---|
| | 31.12.2021 முடிய ஒப்பந்த நீட்டிப்பு வழங்கப்பட்டது. தற்போது வரை மேற்படி அனுமதிபெறப்படததாலும் கொரானா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமுலில் உள்ளதாலும் மேற்கண்ட அனுமதியை எதிர்நோக்கி பொது சுகாதார நலன் கருதி மேலும் ஒரு மாத காலத்திற்கு 31.01.2022 வரை கால நீடிப்பு செய்து வழங்காலம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ.6.00 இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு :-** நிர்வாக நலன் கருதியும் சுகாதார நலன் கருதியும் பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை 01.01.2022 முதல் ஒரு மாத காலத்திற்கு கால நீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.3963/2018/எச்1) |
| **5.** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 22 வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு 107 பணியாளர்களை வழங்கி வரும் M/s UK security Service, Chennai என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண். 3767/2019/ எச்1 நாள் 29.05.2020 –இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.06.2020 முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைந்ததால் அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதால் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s UK security Service, Chennai நிறுவனத்துடன் 31.12.2021 முடிய ஒப்பந்த நீட்டிப்பு வழங்கப்பட்டது. தற்போது வரை மேற்படி அனுமதிபெறப்படததாலும் கொரானா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமுலில் உள்ளதாலும் மேற்கண்ட அனுமதியை எதிர்நோக்கி பொது சுகாதார நலன் கருதி மேலும் ஒரு மாத காலத்திற்கு 31.01.2022 வரை கால நீடிப்பு செய்து வழங்கலாம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ15.00இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு :-** நிர்வாக நலன் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s UK security Service,Chennai நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை 01.01.2022 முதல் ஒரு மாத காலத்திற்கு மட்டும் காலநீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.3767/2019/எச்1) |
| **6.** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 11 வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு 76 பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண். 4468/2018/ எச்1 நாள் 27.02.2020 –இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 29.02.2020 முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைந்ததால் அடுத்த காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற கருத்துரு அனுப்பப்பட்டு இதுவரை அனுமதி வழங்கப்படாமல் உள்ளது. இந்நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்ததாலும், கொரானா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமலில் இருந்ததாலும், ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதால் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் 31.12.2021 முடிய ஒப்பந்த நீட்டிப்பு வழங்கப்பட்டது. தற்போது வரை மேற்படி அனுமதிபெறப்படததாலும் கொரானா நோய் தொற்று காரணமாக ஊரடங்கு அமுலில் உள்ளதாலும் மேற்கண்ட அனுமதியை எதிர்நோக்கி பொது சுகாதார நலன் கருதி மேலும் ஒரு மாத காலத்திற்கு 31.01.2022 வரை கால நீடிப்பு செய்து வழங்காலம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை |

ரூ**10.00**இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** நிர்வாக நலன் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை **01.01.2022** முதல் ஒரு மாத காலத்திற்கு மட்டும் கால நீடிப்பு செய்யலாம் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.4468/2018/எச்1)

**7.** திடக்கழிவு மேலாண்மை பணிகளில் முதல்நிலை சேகரிக்கும் பணிக்குத் தேவையான BOV வாகனங்கள் மொத்தம் – **31**–இல் தற்போது **11** வண்டிகள் மட்டுமே இயங்கி வருவதால், மேற்படி BOV வாகனங்கள் பழுதுநீக்கம் செய்து பயன்படுத்தும்வரை பற்றாக்குறையாக உள்ள வார்டுகளில் தற்போது Source Segregation தடைபடாமல் செய்து முதல்நிலை சேகரம் செய்வதற்கு ஏதுவாக பழைய பழுதாகியுள்ள **19** எண்ணம் தள்ளுவண்டிகளை (Pushcart) சீர்செய்து பயன்படுத்தவும், அதற்காகும் செலவினத்தை தொகை ரூ.**1.00** இலட்சம் மன்ற அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- **1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** பொது சுகாதார நலன் கருதியும், அவசர அவசியத்தை முன்னிட்டு பிரிவு **15**–ன் கீழ் பழுதுபணி செய்வதற்கும், தனி நிறுவனத்தில் ஒப்பந்தப்புள்ளி பெற்று வாங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மன்றம் அனுமதிக்கும், பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3077/2021/எச்1)

**8.** கம்பம் நகராட்சி பகுதியில் உருவாகும் திடக்கழிவுகளை மக்கும் குப்பைகளை ( Wet Waste) தனியாகவும், மக்காத குப்பைகளை (Dry Waste) தனியாகவும் தனித்தனியாக பிரித்து மக்கும் குப்பைகளை உரமாக்குவதற்காக EM SOLUTION 600 லிட்டர் பிரிவு **15**–ன் கீழ் கொள்முதல் செய்வதற்கும், தனி நிறுவனத்தில் ஒப்பந்தப்புள்ளி பெற்று வாங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,00,000/–க்கு (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :– 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும் தனி அதிகாரியின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3076/2021/எச்1)

**9.** தனி அதிகாரியின் முன் அனுமதியின்படி, கம்பம் நகராட்சி பகுதியில் உருவாகும் திடக்கழிவுகளை மக்கும் குப்பைகளை (WetWaste) தனியாகவும், மக்காத குப்பைகளை (Dry Waste) தனியாகவும் தனித்தனியாக பிரித்து மக்கும் குப்பைகளை உரமாக்குவதற்காக EM SOLUTION உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிலிருந்து வாங்குவதற்கு**31.**12.2021–ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | எண்ணம் | விலை விகிதம்ரூ. |
|---|---|---|---|
| 1 | உரிமையாளர், ஸ்ரீ தாய் மூகாம்பிகா எக்ஸ்போர்ட்,<br>4, பூங்கா நகர், பொள்ளாச்சி – **642 006** | **1** லிட்டர் | **1235/–** |
| 2 | உரிமையாளர், ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங்,<br>திருமலை இல்லம், மேல்மாடி, **9/5–1** பஜார் தெரு,<br>அய்யம்பாளையம் – **624 204** | **1** லிட்டர் | **1200/–** |

**அலுவலகக்குறிப்பு** :– 1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள உரிமையாளர், ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங், அய்யம்பாளையம்அவர்களின் ஒப்பந்தப்புள்ளியைமன்றம் அனுமதிக்கலாம்.

2) தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று, அவசர அவசியம் கருதி மேற்காணும் நிறுவனத்தினருக்கு விநியோக உத்தரவு வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.3076/2021/எச்1)

**10.** கம்பம் நகராட்சி பகுதியில் தினந்தோறும் 18TPD குப்பை கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. இவற்றில் 6 மெ.டன் மக்கும் கழிவுகள் ஆங்கூர்பாளையம் ரோட்டில் அமைந்துள்ள நுண் உரம் செயலாக்க மையத்திலும் நந்தகோபால்சாமி நகர் நுண் உரம் செயலாக்க மையத்திலும் MCC மற்றும் கம்பம் கூடலூர் ரோட்டில் அமைந்துள்ள நகராட்சி உரக்கிடங்கில் windrow முறையில் உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. விற்பனை செய்யக்கூடிய DRYWASTE தரம் பிரிரிக்கப்பட்டு தூய்மை பணியாளர் மூலம் விற்பனை செய்யப்பட்டு அவர்களுக்கு தொகை பிரித்து வழங்கப்படுகிறது. விற்பனை செய்ய இயலாத பிளாஸ்டிக் கழிவுகள் ULTRA TECH CEMENT FACTORY க்கு அனுப்பப்படுகிறது இவற்றை தவிர மக்காத கழிவுகள் (துலையணைகள், மேத்தை கறைகள் உடைந்த பாட்டில்கள், கண்ணாடிகள், மரக்கிளைகள், புல் பூண்டுகள் மற்றும் இதர கழிவுகள் நகராட்சி வாகனம் மூலம் ஆணையாளர் உத்தரவுப்படி செய்யப்படாத இடத்தில் நகராட்சி உரக்கிடங்கில் மேற்புறத்தில் ஒரு சிறிய இடத்தில் கொட்டப்பட்டு வருகிறது. இவ்விடத்தை தவிர நகராட்சிக்கு குப்பை கறைகள் கொட்டுவதற்கு வேறு இடம் இல்லை. குறுகிய இடத்தில் தினமும் குப்பை கழிவுகள் கொட்டப்பட்டு வருவதால் மலை பேல் தேங்கி மேடாக உள்ளது. தற்போது வடகிழக்கு பருவமழை ஒரு வாரமாக தொடர்ந்து பெய்து வருவதாலும், தண்ணீர் தேங்கி நகராட்சி JCB மூலம் சீரமைப்பு பணி செய்ய முடியாத நிலை உள்ளதால தற்காலிகமாக மழை காலம் முடியும் வரை தனியார் மூலம் Chain BullDozar வாடகைக்கு அமர்த்தி உரக்கிடடஙகு பகுதியில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்வதற்கு, 07.12.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதற்கு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளிதாரரின் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் ரூ. ஒரு மணி நேரத்திற்கு | |
|---|---|---|---|
| 1. | திரு தங்கராஜ் TASK எர்த் மூவர்ஸ், 33.எல்,.எப்.ரோடு, கம்பம். | கிட்டாட்சி | 1540/– |
| | | டிராக்டர் ஒன்றுக்கு ஒரு நாள் வாடகை (ம) டிரைவர் படி | 3600/– |
| 2. | திரு ஆர்.சுரேஷ், PR Bricks & Earth Movers 248, வாசகம் காம்ப்ளக்ஸ், எல்.எப்.ரோடு, யுவராஜா தியேட்டர் அருகில், கம்பம். | கிட்டாட்சி | 1440/– |
| | | டிராக்டர் ஒன்றுக்கு ஒரு நாள் வாடகை (ம) டிரைவர் படி | 3000/– |

**அலுவலகக்குறிப்பு :– 1)** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் PR Bricks & Earth Movers கொடுத்துள்ள குறைந்தபட்ச விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண்.2562/2021/எச்1)**

**11.** தனி அலுவலரின் முன் அனுமதியின்படி, இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN 60 T 4507 வாகனத்திற்கு மராமத்து பணிகள் செய்து தகுதிச்சான்று பெறுவதற்கு **10.12.2021–**ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1. | திரு பி.முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல், நகராட்சி எதிர்புறம் கம்பம். | 1,30,000/– |
| 2. | திரு S.முருகன், ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ், கம்பம். | 1,31,000/– |

**அலுவலகக்குறிப்பு :–** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர,அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வேலைஉத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண்.2484/2021/எச்1)**

**12.** இந்நகராட்சிக்கு 15வது மாநில நிதிக்குழு பரிந்துரைத் திட்டம் 2021–22ன் கீழ், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். **31113/2021/**அம்ரூட்–**2**,நாள்.**06.12.2021** மற்றும் இந்நகர்மன்ற தீர்மான எண். 2384, நாள். 13.12.2021 கீழ் பணிகள் செய்திட அனுமதிக்கப்பட்டதன்பேரில், ரூ.600000/– மதிப்பீட்டில், Supply Delivery and fixing of New D Main in Ward No.31(122/031/R371) Nandhagopalasamy Nagar in Cumbum Municipality (WS) இல் பணிகள்

| | |
|---|---|
| | செய்திட 29.12.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசிலனைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. |

| **வ. எண்** | **ஒப்பந்தப்புள்ளி விவரம்** | மதிப்பீட்டு விட | |
|---|---|---|---|
| | | சதவிகிதம் குறைவு | சதவிகிதம் கூடுதல் |
| 1. | திரு. எல். இராஜேந்திரன் | 0.06 % | – |
| 2. | திரு வி. கிருஷ்ணன் | – | 0.47% |

**அலுவலகக் குறிப்பு–** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.06 % குறைவாக கொடுத்துள்ள திரு. எல். இராஜேந்திரன் கம்பம் என்பரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2600/2021/இ1)

**13.** இந்நகராட்சிக்கு 15வது மாநில நிதிக்குழு பரிந்துரைத் திட்டம் 2021–22ன் கீழ், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். **31113/2021/**அம்ரூட்**–2,** நாள்.**06.12.2021** மற்றும் இந்நகர்மன்ற தீர்மான எண். 2384, நாள். 13.12.2021 கீழ் பணிகள் செய்திட அனுமதிக்கப்பட்டதன்பேரில், ரூ.700000/– மதிப்பீட்டில், Supply and fixing of open well 40HP submersible Motor and Pump 2 Nos at Surulipatty Water supply Head works in Cumbum Municipality (WS) இல் பணிகள் செய்திட **29.12.2021** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசிலனைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **ஒப்பந்தப்புள்ளி விவரம்** | மதிப்பீட்டு விட | |
|---|---|---|---|
| | | சதவிகிதம் குறைவு | சதவிகிதம் கூடுதல் |
| 1. | திரு. எல். இராஜேந்திரன் | 0.06 % | – |
| 2. | திரு வி. கிருஷ்ணன் | – | 0.47% |

**அலுவலகக் குறிப்பு–** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.06 % குறைவாக கொடுத்துள்ள திரு. எல். இராஜேந்திரன் கம்பம் என்பரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2600/2021/இ1)

**14.** இந்நகராட்சிக்கு 15வது மாநில நிதிக்குழு பரிந்துரைத் திட்டம் 2021–22ன் கீழ், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். **31113/2021/**அம்ரூட்**–2,**நாள்.**06.12.2021** மற்றும் இந்நகர்மன்ற தீர்மான எண். 2384, நாள். 13.12.2021 கீழ் பணிகள் செய்திட அனுமதிக்கப்பட்டதன்பேரில், ரூ.900000/– மதிப்பீட்டில், Supply. Delivery and Installation of organic Shredder (50 ton with 1 HP) cum Pulveriser of shredding wet waste for Micro Composting Centre at Angoorpalayam road in Cumbum Municipality(SWM). இல் பணிகள் செய்திட **29.12.2021** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசிலனைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **ஒப்பந்தப்புள்ளி விவரம்** | மதிப்பீட்டு விட | |
|---|---|---|---|
| | | சதவிகிதம் குறைவு | சதவிகிதம் கூடுதல் |
| 1. | திருவாளர்கள் கோவை கிரின் ரைட் குனியமுத்துார் | 0.001 % | – |
| 2. | திருவாளர்கள் ஜெகத் இன்டஸ்டிரிஸ் கோயம்புத்துார் | – | 0.51% |

| | |
|---|---|
| | **அலுவலகக் குறிப்பு—** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.001 % குறைவாக கொடுத்துள்ள திருவாளர்கள் கோவை கிரின் ரைட் குனியமுத்தூர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண்.2600/2021/இ1)** |
| | **சுமார்ட் கிலாஸ் மற்றும் இதர பணிகள்** |
| | |

**ஒப்பம்/— திரு. ப. பாலமுருகன் எம்.எஸ்ஸி., பி.எட்.,**
**ஆணையாளர்,**
**கம்பம் நகராட்சி.**

**நாள்.** 31.12.2021
**இடம். கம்பம் நகராட்சி**